# சுபீட்சம்

SUPEEDSAM EVERYTHING FOR PEOPLE

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

வியாழக்கிழமை 11.02.2021 supeedsam.com supeedsam@gmail.com







## எமது நாட்டில் ஏன் இரண்டு வகையான சட்டங்கள் உள்ளது; பாராளுமன்றத்தில் சாணக்கியன் கேள்வி



எமது நாட்டில் ஏன் இரண்டு வகையான சட்டங்கள் உள்ளது? ஒரு சட்டம் ஒரு பக்கம் உள்ள மக்களுக்கும், இன்னொரு சட்டம் இன்னொரு பக்கம் உள்ள மக்களுக்கும். உங்களிடம் இதனை கேட்பதற்கான காரணம் உங்களுக்கு முழு ஆளுமையும், தகைமையும், அதிகாரமும் உள்ளது என பாராளுமன்றத்தில் நேற்று பிரதமர் மகிந்த ராஜபக்சவிடம் கேள்வியெழுப்பினார் பாராளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் நாடாளுமன்றத்தில் நேற்று இடம்பெற்ற கேள்வி நேரத்தின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

## குருந்தூர்மலை அகழ்வாராட்சியில் எட்டுமுக தாராலிங்கம்

### சிவலிங்கத்தை ஒத்த உருவம் ஒன்று வெளிப்பட்டுள்ளது

  

( சண்முகம் தவசீலன்)

முல்லைத்தீவு மாவட்டத்தின் தண்ணிமுறிப்பு குருந்தூர்மலை பகுதியில் மக்களது பல்வேறு எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு மத்தியிலும் கடந்த 18.1.2021 அன்று தொல்பொருள் ராஜாங்க அமைச்சர் விதுர விக்ரமநாயக்க அவர்களுடைய தலைமையில் அகழ்வாராட்சி பணிகள் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

அதனை தொடர்ந்து சுமார் ஒரு வார காலப்பகுதியில் குறித்த பகுதிக்கு வருகை தந்த அகழ்வாராட்சியாளர்கள்

02 ஆம் பக்கத்தில்...

## கல்முனை மாநகர சபையினால் 12 ஆம் வட்டாரம் புறக்கணிக்கப்படுகிறதா?

### உண்மையில்லை என்கிறார் மாநகர முதலவர் ஏ.எம்.றகீப்



(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபையின் அனைத்து சேவைகளும் இன, மத, பிரதேச பாகுபாடின்றி சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் 12ஆம் வட்டார தமிழ் பகுதி புறக்கணிக்கப்படுவதாக கூறப்படுவதில் எவ்வித உண்மையுமில்லை எனவும் மாநகர முதலவர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் தெரிவித்தார்.

கல்முனை மாநகர சபை உறுப்பினர் ஒருவர் ஊடகங்களில் தெரிவித்துள்ள குற்றச்சாட்டுகள் குறித்து புதன்கிழமை (10) இரவு கருத்து வெளியிடும்

02 ஆம் பக்கத்தில்...

## ஹரீஸ் எம்.பியின் அஜன்டாவில் இயங்கும் முதல்வரின் தன்னிச்சையான போக்குகள் நிறுத்தப்பட வேண்டும்

(பாறுக் ஷிஹான் , வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை மாநகர சபையினை உடனடியாக கலைக்க வேண்டும் என ஆளுநரிடம் வேண்டுகோள் விடுப்பதாக தமிழ் தேசிய கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் சந்திரசேகரம் ராஜன் தெரிவித்துள்ளார்.

கல்முனை ஊடக மையத்தில் செவ்வாய்க்கிழமை

02 ஆம் பக்கத்தில்...



## திருமலை மாவட்டத்தில் தொடரும் சட்டவிரோத மீன்பிடி; மீனவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம்



(பொன்ஆனந்தம்)

திருகோணமலை மாவட்டத்தில் தொடரும் சட்டவிரோத மீன்பிடி முறையை எதிர்த்து திருகோணமலை நகரின் மத்தியில் மீனவர்கள் நேற்று ஆர்ப்பாட்டம் ஒன்றில் ஈடுபட்டார்கள்.

டைனமைட், தடைசெய்யப்பட்ட வலை, தடை

02 ஆம் பக்கத்தில்...

## குற்றவியல் சட்டத்தை பாடசாலை பாடத்திட்டத்தில் சேர்க்க நடவடிக்கை

குற்றவியல் சட்டத்தை பாடசாலை பாடத்திட்டத்தில் ஒரு பாடமாக சேர்க்கவும், குற்றவியல்

02 ஆம் பக்கத்தில்...

பொத்துவில் பொலிகண்டி பேரணி தொடர்பாக

## கொழும்பு ஊடகங்கள் கவனம் செலுத்தாமை ஏன்?

### அமெரிக்கா கேள்வி!



பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி குறித்து கொழும்பை தளமாகக் கொண்ட ஊடகங்கள் கவனம் செலுத்தாமை ஏன் என இலங்கைக்கான

02 ஆம் பக்கத்தில்...

கொவிட் சடலம் பிரதமரின் அறிவிப்பு

## அமெரிக்க தூதர் உட்பட பாராளுமன்ற உறுப்பினர்கள் பாராட்டு

பிரதம மந்திரி மஹிந்த ராஜபக்ஷவை இலங்கையில் கோவிட் பாதிக்கப்பட்டவர்களை அடக்கம் செய்ய அனுமதிப்பது குறித்த அறிவிப்பை எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் மற்றும் இலங்கைக்கான அமெரிக்க தூதர் உட்பட பலர் பாராட்டியுள்ளனர்..

நேற்று நாடாளுமன்றத்தில் ஒரு கேள்விக்கு பதிலளித்த பிரதமர் ராஜபக்ஷ,

02 ஆம் பக்கத்தில்...






## வவுணதீவில் 11 மில்லியன் செலவில் சுத்தமான குடிநீர் வழங்குல் திட்டம் ஆரம்பம்



(ரீ.எல்.ஜவ்பர்கான்)

02 ஆம் பக்கத்தில்...

## பதவிகளை அமானிதமாக்கி சமூக வியூகங்களில் வெற்றி கொண்டோம்

### ஹாபீஸ் நசீர் எம்.பி.



( ரீ.எல்.ஜவ்பர்கான் )

அரசியலமைப்பு இருபதாவது திருத்தத்துக்கு ஆதரவளித்த பிரதான நோக்கம் நிறைவேறிவிட்டதாக, மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும்

02 ஆம் பக்கத்தில்...






## திருமலை மாவட்டத்தின் பொருளாதாரத்தை தனியாக மண் அகழ்வு அனுமதி வழங்குவதன் மூலம் அபிவிருத்தி செய்ய முடியாது



( ஹஸ்பர் ஏ ஹலீம்)

இது போன்ற ஒரு திட்டத்தை யாரேனும் செயல்படுத்தினால், அது பரந்த சுற்றுச்சூழல் மற்றும் மாவட்டத்தின் அனைத்து கரையோர பகுதிகளையும் அழிக்க வழிவகுக்கும் என்று கிழக்கு மாகாண ஆளுனர் அநுராதா யஹம்பத் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட செயலகத்தில் செவ்வாய்க்கிழமைகாலை நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு கூட்டத்தில் கலந்துகொண்டு உரையாற்றிய போதே அவர்

02 ஆம் பக்கத்தில்...




## கொவிட் சடலம் பிரதமரின் அறிவிப்பு....

எதிர்காலத்தில் இலங்கையில் கோவிட் பாதிக்கப்பட்டவர்களை அடக்கம் செய்ய அரசாங்கம் அனுமதிக்கும் என்றார்.

இந்த முடிவு குறித்து கருத்து தெரிவித்த பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்ரமரத்ன, கோவிட் பாதிக்கப்பட்டவர்களை அடக்கம் செய்ய அனுமதிக்கும் அரசாங்கத்தின் நிலைப்பாட்டை வரவேற்கிறேன் என்றார். இதற்கிடையில், அனைத்து இலங்கை மக்கல் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் ரிஷார்ட் பதியுதீன் பிரதமரின் அறிக்கையை பாராட்டினார். பிரதமரின் வார்த்தைகள் விரைவில் செயல்பாட்டுக்கு வரும் என பாராளுமன்ற உறுப்பினர் ரிசாட் பதியுடீன் நம்பிக்கை தெரிவித்தார், மேலும் அவர் தனது கட்சி உறுப்பினர்களுடன் சேர்ந்து ''நீதிக்காக நிற்க கைகோர்த்த அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவிக்க விரும்புகிறேன் .

கோவிட் பாதிக்கப்பட்டவர்களின் கட்டாய தகனத்தை முடிவுக்கு கொண்டுவருவதற்கான பிரதமரின் அறிவிப்பு குறித்த ஊடக அறிக்கைகளை அமெரிக்கா வரவேற்கிறது என்று இலங்கைக்கான அமெரிக்க தூதர் அலியானா பி. டெப்லிட்ஸ் தெரிவித்தார்.

சர்வதேச பொது சுகாதார விதிமுறைகளுக்கு ஏற்பவும், மத சடங்குகளுக்கு மதிப்பளிக்கும் விதமாகவும் திருத்தப்பட்ட நடைமுறையை அமல்படுத்துவது ஒரு சாதகமான நடவடிக்கை என்று அவர் மேலும் தெரிவித்தார்..

கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட முஸ்லீம்களின் சடலங்களை அடக்கம் செய்வது குறித்து இலங்கை அளித்த உறுதிமொழியை பாகிஸ்தான் பிரதமர் இம்ரான் கான் வரவேற்றுள்ளார்.

## எமது நாட்டில் ஏன் இரண்டு வகையான சட்டங்கள்...

இதன்போது கருத்து வெளியிட்ட அவர், தற்பொழுது நாட்டில் இருக்கின்ற அரசியல் கைதிகளின் மொத்த எண்ணிக்கை எத்தனை என்பதையும், அக் கைதிகள் இருக்கின்ற முகாம்கள் எத்தனை என்பதையும், அவர்களை விடுவிப்பது தொடர்பாக ஏன் இதுவரை காலமும் விரைவான நடவடிக்கை எடுக்கவில்லை என்பதையும், நாடு முழுவதிலும் ஒவ்வொரு மாவட்டத்திலும் பாதுகாப்புப் படையினர் இருக்கின்ற காணிகளின் எண்ணிக்கை எத்தனை என்பதையும், பாதுகாப்புப் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் தனியார் காணிகள் மற்றும் அரசாங்க அலுவலக காணிகள் எத்தனை என்பதையும் பிரதம அமைச்சர் குறிப்பிடுவாரா? இன்றேல் ஏன்? என கேள்வி எழுப்பியிருந்தார்.

அதற்குப் பதிலளித்த பிரதமர் இலங்கையில் அரசியல் கைதிகள் எந்த அடிப்படையில் கைது செய்யப்பட்டுள்ளனர் என்னும் விடயத்தை நான் இங்கு குறிப்பிட விரும்புகின்றேன்.

இலங்கையிலுள்ள மாவட்டங்களில் காணப்படும் நிலங்கள் சம்மந்தமாக பேசுவது தேசிய பாதுகாப்பிற்கு தடையாக இருக்கின்றதாக தேசிய பாதுகாப்பு அமைச்சர் கூறியமையினால் நான் அதைப் பற்றி பேசினால் அது தேசிய பாதுகாப்பிற்கு பாதிப்பாக அமையும் என்பதனால் அதைப் பற்றி இங்கு கூறவில்லை எனக் குறிப்பிட்டார்.

இந்தநிலையில், அவர் அளித்த பதிலில் தனக்கு திருப்தி இல்லை எனக் குறிப்பிட்ட இரா.சாணக்கியன், அரசியல் கைதிகளில் பலர் நான் பிறப்பதற்கு முதல் இருந்தே சிறைச்சாலைகளில் இருக்கின்றார்கள். அதிலும் தற்போது ஒரு சில வருடங்களாக அவர்கள் இறந்து கொண்டு வருகிறார்கள்.

உங்களது தேர்தல் விஞ்ஞாபனங்களில் ஒன்று அரசியல் கைதிகளை விடுவிப்பது ஆகும். வட கிழக்கு முழுவதிலும் இதனை சொல்லி இருந்தீர்கள். நாமல் ராஜபக்ஷ அவர்களும் சிறைச்சாலையில் இருந்து வெளி வரும்போது இதனை வலியுறுத்தி இருந்தார். அதிலும் ஒங்க காலத்தில் நடந்த விடயங்கள் தொடர்பாக கைது செய்யப்பட்ட அரசியல் கைதிகளும் விடுதலை செய்யப்பட்டிருந்தார்கள்.

அதே நேரம் ஜோன்சன் பெர்னாண்டோ அன்றைய தினம் பிள்ளையான் அரசியல் கைதி என்று கூறியிருந்தார்கள். ஆனால் அவர் அரசியல் கைதி அல்ல. மறைந்த பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஐயாவை சுட்டுக் கொன்றார் என்ற அடிப்படையில் கைது செய்யப்பட்டவராவார்.

சாஜன் ரத்னாயக்கவும், இதே மன்னிப்பு அடிப்படையில் விடுதலை செய்யப்பட்டார். இவ்வாறிருக்கையில் இன்னும் சிறைகளில் வாழும் தமிழ் அரசியல் கைதிகள் விடுதலை செய்யப்படவில்லை. அவர்களுக்குரிய வழக்கும் ஒழுங்கான முறைகளில் தாக்கல் செய்யப்படவில்லை.

அனைவரும் அறிந்த விடயம் அதாவது கடந்த மூன்றாம் திகதி முதல் ஏழாம் திகதி வரை நடந்த பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான போராட்டத்தில் மிக முக்கியமாக உரைக்கப்பட்ட விடயம் அரசியல் கைதிகளின் விடுதலை ஆகும்.

அத்துடன் கடைசி யுத்தத்தில் கைது செய்யப்பட்டவர்களின் பெற்றோர்கள் சென்ற வருடம் முகப்புத்தகத்தில் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் படங்களை பதிவு செய்தார்கள் என்ற அடிப்படையில் கைது செய்யப்பட்டார்கள். அதாவது அவர்கள் கடந்த இறுதி யுத்தத்தின் போது 2009 இல் பலர் இராணுவத்திடம் சரணடைந்து இருந்தார்கள்.

அத்துடன் இங்கு ஒரு சில மாதங்களுக்கு முன்பு நவம்பர் மாதம் 2020 இல் பல இளைஞர்கள் படங்களை முகப்புத்தகத்தில் பதிவிட்டார்கள் என்று கைது செய்யப்பட்டு இருந்தார்கள். இவர்களுக்கு எதிராகவும் இன்னும் முறையாக வழக்கு தாக்கல் செய்யப்படவில்லை.

இதில் என்னுடைய கேள்வி எமது நாட்டில் ஏன் இரண்டு வகையான சட்டங்கள் உள்ளது? ஒரு சட்டம் ஒரு பக்கம் உள்ள மக்களுக்கும், இன்னொரு சட்டம் இன்னொரு பக்கம் உள்ள மக்களுக்கும். உங்களிடம் இதனை கேட்பதற்கான காரணம் உங்களுக்கு முழு ஆளுமையும், தகைமையும், அதிகாரமும் உள்ளது.

இவை தொடர்பாக நடவடிக்கைகளை எடுப்பதற்காகவே உங்களிடம் நான் இக் கேள்விகளை தொடுக்கின்றேன். நீங்கள் இதனை பக்கச்சார்பற்ற முறையில் கையாண்டு அதற்கான தீர்வை பெற்றுத்தர வேண்டும். இது உங்களால் மாத்திரம் முடியுமே தவிர வேறு ஒருவராலும் இதனை செய்ய முடியாது. உங்கள் தேர்தல் விஞ்ஞாபனத்தில் சொல்லப்பட்ட இவ் விடயத்தை நாமும் எமது மக்களும் நூறு வீதம் நம்பி உள்ளோம் நீங்கள் செய்வீர்கள் என்று.

நாங்கள் எங்கள் கட்சி சார்பாக கேட்கவில்லை. பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரையிலான கண்டன ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்ட இலட்சக்கணக்கான மக்களின் கோரிக்கை இது.

அத்தோடு இன்னும் ஈஸ்டர் குண்டு தாக்குதலோடு சம்பந்தப்பட்டவர்கள் கூட சரியான முறையில் விசாரிக்கப்பட்டு அவர்களுக்கான நடவடிக்கை எடுக்கப்படவில்லை. இன்னும் அவர்கள் மேல் எந்த விதமான வழக்கும் தொடரப்படவில்லை.

இதில் பல அப்பாவிகளும் உள்ளனர். நான் கேட்கிற முதல் கேள்வி இவர்களுக்கு என்ன நடக்கப் போகின்றது? அதாவது இவர்கள் விடுதலை செய்யப்பட போகின்றார்களா? அல்லது எவ்வித விசாரணைகளும் இன்றி அப்படியே தான் இருக்கப் போகிறார்களா? நீங்கள் இத்தேர்தலை வென்று.

## வவுணதீவில் 11 மில்லியன் செலவில் சுத்தமான குடிநீர் வழுங்குல் திட்டம்...

சகல மக்களுக்கும் சுத்தமான சுகாதாரமான குடிநீரை வழங்கும் அரசாங்கத்தின் திட்டத்தின்கீழ நீர்வழுங்கல் அமைச்சின் வழிகாட்டலில் மட்டக்களப்பு மாவட்டத்தில் குடிநீர்த் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இத்திட்டத்தின்கீழ் மட்டக்களப்பு மாவட்டத்தில் யுத்தம் மற்றும் வெள்ளத்தினால் பெரிதும் பாதிக்கப்பட்ட பின்தங்கிய கிரமாமான வவுணதீவு பிரதேச செயலகப்பிரிவிற்குட்பட்ட கொத்தியாபுலை கிராமத்தில் சுமார் 11 மில்லியன் ரூபாய் செலவில் குடிநீர்திட்டம் 10.2.2021 ஆரம்பித்து வைக்கபட்டது.

தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் எக்சன் யுனிட்டி லங்கா நிறுவனம் இத்திட்டத்தினை முன்னெடுத்து வருகின்றது. இத்திட்டத்தினூடாக 412 குடும்பங்கள் நன்மையடையவுள்ளன.

வவுணதீவு பிரதேச செயலாளர் எஸ்.சுதாகர் தலைமையில் நடைபெற்ற குடிநீர்திட்ட ஆரம்ப வைபவத்தில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபை அதிகாரிகள் பிரதேச செயலக உத்தியோகாத்தர்கள் வவுணதீவு பிரதேச சபை தலைவர் எஸ்.சண்முகராசா உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

## குருந்தூர்மலை அகழ்வாராட்சியில் எட்டுமுக தாராலிங்கம்...

இராணுவத்தினரையும் இணைத்து அகழ்வாராட்சி பணிகளை மேற்கொள்கின்றவர்கள் தொடர்ச்சியாக அகழ்வாராட்சி பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். குறித்த குருந்தூர் மலை பகுதியிலே இலிங்க வழிபாடுகள் பெற்றமைக்கான பல்வேறு ஆதாரங்கள் இருப்பதாக குறித்த பகுதியில் பல மூத்தவர்கள் கருத்து தெரிவித்த நிலையில் இதனை உறுதிப்படுத்தும் முகமாக குருந்தூர்மலைப்பகுதியில் இடம்பெறும் அகழ்வாராட்சி பணிகளின் போது பல்லவர்கால எட்டுமுக தாராலிங்கம் எனகருதப்படும் லிங்க உருவத்தை ஒத்த சிலை ஒன்று வெளி தோன்றியுள்ளது.

குறித்த குருந்தூர் மலை பகுதியில் இடம்பெறும் அகழ்வாராட்சி பணிகளை பார்வையிட்டு அறிக்கையிட ஊடகங்களுக்கு தடைவிதிக்கப் பட்டிருந்த போதும் குறித்த புகைப்படங்கள் முகநூலில் வெளியாகி வருகின்றன

## பதவிகளை அமானிதமாக்கி சமூக வியூகங்களில் வெற்றி கொண்டோம்...

கிழக்கு மாகாண முன்னாள் முதலமைச்சருமான ஹாபிஸ் நஸீர் அஹமட் தெரிவித்தார்.

கொரோனா தொற்றில் உயிரிழக்கும் முஸ்லிம்களின் ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்கு அரசாங்கம் இன்று அனுமதி வழங்கியமை குறித்து,கருத்து தெரிவித்த போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ பாராளுமன்றத்தில் இதுகுறித்து அறிவித்திருந்தார். இதுபற்றி ஹாபிஸ் நஸீர் குறிப்பிட்டதாவது;

இறைவன் எமக்குத் தந்த அமானிதமாகவே எம்,பி பதவியைக் கருதுகிறோம். பொறுப்புக்கள் பற்றி விசாரிக்கப்படும் தீர்ப்பு நாளில், எம் பணிகளில் எல்லாம்வல்ல இறைவன் திருப்தியுற வேண்டும். இதற்காகத்தான் எமக்கு கிடைத்த சந்தர்ப்பத்தை புத்திசாதுர்யமாகப் பயன்படுத்தினோம்.

கொடுங்கோலர்களின் கரங்களைப் பலப்படுத்தியதாக, எங்களைக் கொச்சைப் படுத்தவும் செய்தனர். முஸ்லிம்களின் ஜனாஸாக்களை, நல்லடக்கம் செய்வதற்கு எப்படியாவது அனுமதி எடுத்துவிட வேண்டுமென உழைத்த நாங்கள், சந்திக்க நேரிட்டது ஏராளம். பழிவாங்கும் மனநிலையிலிருந்த பல எம்பிக்களை, இவ்விடயத்தில் இணங்கச் செய்வதற்கு நாங்கள் எடுத்த எத்தனங்களை, குப்பை கிளறிகள் அறியப்போவதுமில்லை.

வெறும் உணர்ச்சிவசப்படலுக்காக சுமார் இருபது வருடங்களாக, ராஜபக்ஷக்களுக்கு எதிராக வாக்களித்த ஒரு சமூகத்தின் மத உரிமையை இருபதுக்கு வாக்களித்த நொடிப்பொழுதில் வென்றெடுக்க முடியுமா? இவ்வாறு எதிர்பார்ப்பது முட்டாள்தனமில்லையா? இதற்குப் பின்னரும், சிலரின் ''சம்சாவெடில்'' பேச்சுக்கு எமது சமூகம் ஏமாறப் போகிறதே!இதுதான் எம்மைக் கவலைப் படுத்துகிறது.

உலக முஸ்லிம்களின் உள்ளங்களையே,தேன் தொட்டியாக்கிய ராஜபக்ஷ அரசின் இந்த முடிவுக்காக எனது,சிரசை நான் சஜ்தாவில் கிடத்துகிறேன். உள்ளங்களை ஆள்கின்ற இறைவன் ஆட்சியாளர்களின் மனநிலைகளை மாற்றிவிட்டான். எனினும் எம்மில் சில சகோதரர்கள் எரிக்கப்பட்டது,கண்ணீரைச் செந்தணலாக்கிக் கொண்டே இருக்கிறது.

எமது நம்பிக்கையாலேயே, இத்துயரங்களை ஆற்றுப்படுத்துகிறோம் . இந்நிலையில், ஜனாஸாக்களை நல்லடக்கம் செய்வதற்கு இன்றுமுதல் அனுமதியளி க்கப்பட்டுள்ளது. இனிமேல்,எமது உறவுகள் நெருப்பில் எரியப்போவதில்லை. இதற்காக உழைத்த அரசாங்கம், பஷில்ராஜபக்ஷ, பாராளுமன்றத்தில் இதை அறிவித்த பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ மற்றும் இணக்கம் தெரிவித்த ஜனாதிபதி கோட்டாபயராஜபக்ஷ ஆகியோருக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றேன்.

## பொத்துவில் பொலிகண்டி பேரணி தொடர்பாக...

அமெரிக்க தூதுவர் அலெய்னா ரெப்லிட்ஸ் கேள்வி எழுப்பியுள்ளார். இந்த விடயம் குறித்து தனது ருவிட்டரில் பதிவிட்டுள்ள அவர், அமைதிவழிப் போராட்டம் என்பது அடிப்படை ஜனநாயக உரிமைகளில் ஒன்றாகும். இவ்வாறான அமைதிவழிப் போராட்டங்களுக்கு செவிசாய்க்க வேண்டும். அவர்களின் கவலைகள் குறித்து அவதானம் செலுத்த வேண்டும்.

பொத்துவில் முதல் பொலிகண்டி வரையான பேரணி குறித்து தமிழ் ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருந்தமையை அவதானித்தேன். ஆனால் கொழும்பைத் தளமாகக் கொண்ட ஊடகங்கள் இது குறித்து ஏன் கவனம் செலுத்தவில்லை? என பதிவிட்டுள்ளார்.

## திருமலை மாவட்டத்தில் தொடரும் சட்டவிரோத...

செய்யப்பட்ட பிரதேசங்களில் மீன்பிடித்தல் தொடர்ந்தும் இடம்பெறுவதை கண்டித்தும் உரிய அதிகாரிகள் இதன் நிமித்தம் தமது கடமைகளை துஷ்பிரயோகம் செய்வது குறித்தும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட மீனவர்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர். இலங்கை கடலோர காவல் படை, இலங்கை கடற்படை, இச் சட்டவிரோத மீன்பிடி முறைகளுக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்காத நிலை தொடர்ந்தும் காணப்படுவதாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட முனவர்கள் கோஷம் எழுப்பினர்.

குறித்த ஆர்ப்பாட்டத்தில் சுமார் நூற்றுக்கணக்கான மீனவர்கள் கலந்து கொண்டுள்ளனர்.

## குற்றவியல் சட்டத்தை பாடசாலை பாடத்தி...

நீதி முறையின் சீர்திருத்தங்களுக்கு ஏற்ப குழந்தைகள் தொடர்பாக தனித்தனி சட்டங்களை உருவாக்கவும் முன்மொழியப்பட்டுள்ளது என்று நீதி அமைச்சு தெரிவித்துள்ளது. நேற்று காலை நாடாளுமன்றத்தில் கூடிய நீதித்துறை விவகாரங்களுக்கான அமைச்சர் ஆலோசனைக் குழுவில் இந்த திட்டங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

கூட்டத்தில், அதே குற்றத்திற்காக போதைப்பொருள் துஷ்பிரயோகம் செய்பவர்கள் மீண்டும் மீண்டும் சிறையில் அடைக்கப்படுவதை தடுக்க நடவடிக்கை எடுப்பது குறித்து விவாதிக்கப்பட்டுள்ளது.

போதைக்கு அடிமையானவர்களை மறுவாழ்வு அளிப்பது மற்றும் குற்றவாளிகள் என்று முத்திரை குத்தாமல் உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட அவர்களை ஊக்குவிப்பதும் தொடர்பாகவும்விவாதிக்கப்பட்டது.

## ஹரீஸ் எம்.பியின் அஜன்டாவில் இயங்கும் முதல்வரின் தன்னிச்சையான...

(9) இரவு இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது கல்முனை மாநகர சபையின் 12 வட்டாரமான பெரிய பகுதியில் மின்குமிழை கொள்வனவு செய்தும் அதனை பொருத்த முடியாமல் இருப்பதாகவும் கல்முனை வாழ் இளைஞர்கள் அதனை பொருத்துவதற்கு முன்வருமாறு எனது சக கந்தசாமி சிவலிங்கம் கேட்டுள்ளார். இதற்கு காரணம் பாதீடு தொடர்பில் எம்மால் வாக்களிக்கப்பட்டமை ஆகும். உண்மையில் இந்த பாதீட்டிற்கு எதிராக வாக்களித்தமைக்கு முக்கிய காரணம் முதல்வருடன் கொண்ட தனிப்பட்ட குரோதமோ வெறுப்புக்களோ அல்ல. இந்த வாக்களிப்பின் போது எமது இளைஞர்கள் பொதுமக்கள் விடுத்த நியாயமான கோரிக்கைகளை ஏற்று தான் பாதீட்டிற்கு எதிராக எமது நியாயமான குறைபாடுகள் வேண்டுகோள்களை கூறி வாக்களித்தோம். தற்போது இவ் விடயங்களை முதல்வர் வைத்துக்கொண்டு எமது பகுதிகளில் இடம்பெறும் திண்மக்கழிவுகள் தொடர்பான பிரச்சினை மற்றும் மின்விளக்குகள் ஒளிராமை தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்கு எவ்வித பதிலும் கிடைப்பதில்லை. சபையில் குறைகளை சுட்டிகாட்டி கதைக்கின்ற போது பிழையானவர்களாக எம்மை அடையாளப்படுத்துகின்றனர். இவ்வாறாக மாநகர சபை இயங்குவதனால் எந்தவித பிரயோசனமும் இல்லை. எனவே இந்த மாநகர சபையை கலைக்குமாறு ஆளுநர் ஜனாதிபதியை கேட்டுக்கொள்கின்றோம். இவ்வாறு இப் பாரபட்சம் தொடருமாயின் இனரீதியான பிரச்சினை தொடர வாய்ப்பாகும். அத்துடன் ஹரீஸ் எம்.பியின் அஜன்டாவில் இயங்கும் முதல்வரின் தன்னிச்சையான போக்குகள் நிறுத்தப்பட வேண்டும் என குறிப்பிட்டார்.

## கல்முனை மாநகர சபையினால் 12 ஆம் வட்டாரம் புறக்கணிக்கப்படுகிறதா?...

போதே முதல்வர் இதனைக் குறிப்பிட்டார். இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்;

மாநகர சபையின் பட்ஜெட்டுக்கு ஆதரவளிப்பதும் எதிர்ப்பதும் உறுப்பினர்களது சுதந்திரமாகும். விரும்பியோ விரும்பாமலோ கல்முனை மாநகர சபையில் ஆளும் தரப்பு, எதிர்த்தரப்பு என இரண்டு அணிகள் இருக்கின்றன. ஆளும் கட்சியானது எதிர்க்கட்சியையோ அல்லது எதிர்க்கட்சியானது ஆளும் கட்சியையோ ஆதரிப்பதில்லை என்பது அரசியல் யதார்த்தம்.

எவ்வாறாயினும் கல்முனை மாநகர சபையின் சிக்கலான அரசியல் சூத்திரத்திற்கு மத்தியில் தமிழ் கட்சிகளின் சில உறுப்பினர்கள் எமது ஆளும் தரப்பை ஆதரிக்கின்றனர். மாநகர சபை ஊடாக மக்களுக்கு சேவையாற்ற வேண்டும் என்கிற நோக்கிலேயே அவர்கள் எமக்கு ஒத்துழைப்பு வழங்கி வருகின்றனர். சிலர் எதிர்த்து நிற்கின்றனர். ஆனால் இன்னும் சிலர் எவ்வித நியாயமான காரணமுமின்றி, வேண்டுமென்றே மாநகர சபை ஆட்சியை குழப்பும் நோக்கில் செயற்பட்டு வருகின்றனர். அவ்வாறான ஒரு உறுப்பினரே தனது பிரதேசம், மாநகர சபை நிர்வாகத்தினால் புறக்கணிக்கப்படுவதாக மக்கள் மத்தியில் பொய்களை பரப்பி வருகின்றார்.

இந்த உறுப்பினர் பிரதிநித்துவம் செய்கின்ற 12ஆம் வட்டாரதமிழ் பகுதியில் கடந்த வருடம் ஜூலை மாதம் தொடக்கம் டிசம்பர் வரையான 06 மாத காலத்தில் மாத்திரம் சுமார் 225 தெரு மின்குமிழ்களும் 15 கோப்ரா எல்.ஈ.டீ. மின்விளக்குத் தொகுதிகளும் மாநகர சபையினால் பொருத்தப்பட்டுள்ளன. அவ்வாறே திண்மக்கழிவகற்றல் சேவை மற்றும் வடிகான் துப்பரவு பணிகளும் சிறப்பாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

எமது மாநகர சபையினால் மேற்கொள்ளப்பட வேண்டிய அத்தனை சேவைகளும் எவ்வித குறைபாடுகளுமின்றி அந்த வட்டாரத்தில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற நிலையிலேயே குறித்த உறுப்பினர் உண்மைகளை மறைத்து, தனது பகுதிக்கு மின்குமிழ் கூடத்தரவில்லை என்று விசமத்தனமான கருத்துக்களை தெரிவித்திருக்கிறார்.

தெரு மின்விளக்கு பராமரிப்பு மற்றும் புதிய மின்குமிழ் பொருத்தும் விடயங்களில் உறுப்பினர்களின் பரிந்துரைகளுக்கு மேலதிகமாக வணக்கஸ்தலங்கள், நிறுவனங்கள், மற்றும் அமைப்புகளினதும் பொது மக்களினதும் நேரடி வேண்டுகோள், முறைப்பாடுகளை கவனத்திலெடுத்து நிறைய மின்குமிழ்கள் போடப்படுகின்றன. 12ஆம் வட்டாரத்தில் எந்த இடத்திலாவது தெரு விளக்கு பழுதடைந்திருந்தால் பொது மக்கள் மாநகர சபைக்கு நேரடியாக முறைப்பாடு செய்வார்களாயின், அது தொடர்பில் உடனடி நடவடிக்கை எடுக்கப்படும். இது விடயத்தில் உறுப்பினர்கள் அரசியல் இலாபம் தேடுவதற்கு இடமளிக்கத் தேவையில்லை.

மாநகரசபையில் ஊழல் இடம்பெறுவதாக தெரிவிக்கின்ற இவ்வாறான உறுப்பினர்கள், ஏன் அது தொடர்பில் இலஞ்ச ஊழல் ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யவில்லை. யாராவது ஒருவர் அவ்வாறான முறைப்பாட்டை செய்கின்றபோது விசாரணைகள் நடத்தப்பட்டு, சம்மந்தப்பட்டோர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வேண்டுமல்லவா? என்றார்.

## திருமலை மாவட்டத்தின் பொருளாதாரத்தை தனியாக மண் அகழ்வு...

இவ்வாறு தெரிவித்தார். தொடர்ந்தும் கருத்துரைக்கையில்;

மண் அகழ்வுக்கான அனுமதி பத்திரங்களை வழங்க அரச திணைக்கள முகவர் தலைமையிலான குழுவை நாங்கள் இப்போது நியமித்துள்ளோம். குழு சரியான அனுமதி பத்திரங்கள் வழங்கும் செயல்முறையை உருவாக்கும். இன்று இந்த மாவட்டத்தில் மணல் பிரச்சினை மிகப்பெரிய பிரச்சினையாக மாறியுள்ளது. நாங்கள் இன்னும் முக்கியமான பகுதிகளில் கவனம் செலுத்த வேண்டும், என்று அவர் கூறினார்.

பின்னர் அவர் ஒரு வனவிலங்கு இடமாக சாம்பல் தீவு களப்புப் பகுதியை வர்த்தமானி அறிவித்தல் செய்யும் தற்போதைய நிலை குறித்து கவனம் செலுத்தினார்.

தொடர்புடைய அரச அறிவிப்பு அமைச்சரவை ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது என்று திருகோண மாவட்ட செயலாளர் சமன் தர்ஷன பாண்டிகோராள இதன் போது தெரிவித்தார்.

இந் நிகழ்வில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன், சாம்பல் தீவு பகுதியில் தனியார் நில உரிமையாளர்கள் இருப்பதால், அது குறித்து விசாரிக்க வேண்டும் என்று கூறினார்.

அபிவிருத்தி என்ற போர்வையில் மக்கள் தங்கள் உரிமைகளை இழக்க முடியாது என்றும் அவர் தெரிவித்தார்

இதற்கு பதிலளித்த ஆளுநர், குளம் பாதுகாக்கப்படாவிட்டால், மக்கள் பல நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என்று கூறினார். மேலும் கூறிய ஆளுநர் ஆர். சம்பந்தனிடம் சுற்றுச்சூழலைப் பாதுகாக்கும் அதே வேளையில் தனது மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கத் தெரிவிக்குமாறு கேட்டுக் கொண்டார்.

இதில் திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழு இணைத்தலைவருமான கபில நுவான் அத்துகோரல, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக், மாகாண பிரதம செயலாளர் துசித பி.வனிகசிங்க மற்றும் மாவட்டத்தின் அனைத்து அரச நிறுவனங்களின் திணைக்களத் தலைவர்கள்,முப்படைகளின் உயரதிகாரிகள்,உள்ளூராட்சி மன்றத் தவிசாளர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# மின்குமிழை கொள்வனவு செய்தும் அதனை பொருத்த முடியாமல் உள்ளது; ஆதங்கப்பட்ட உறுப்பினர்

(பாறுக் ஷிஹான்)

மின்குமிழை கொள்வனவு செய்தும் அதனை பொருத்த முடியாமல் இருப்பதாகவும் கல்முனை வாழ் இளைஞர்கள் அதனை பொருத்துவதற்கு முன்வருமாறு தமிழ் தேசிய கூட்டமைப்பின் கல்முனை மாநகர சபை உறுப்பினர் கந்தசாமி சிவலிங்கம் கோரிக்கை விடுத்துள்ளார்.




கல்முனை ஊடக மையத்தில் செவ்வாய்க்கிழமை(9) இரவு இடம்பெற்ற விசேட செய்தியாளர் சந்திப்பில் கலந்து கொண்டு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும் தனது கருத்தில் தெரிவித்ததாவது

எமது கல்முனை மாநகர சபையின் 33 ஆவது அமர்வின் போது பாதீடு தொடர்பில் எம்மால் வாக்களிக்கப்பட்டது. உண்மையில் இந்த பாதீட்டிற்கு எதிராக வாக்களித்தமைக்கு முக்கிய காரணம் முதல்வருடன் கொண்ட தனிப்பட்ட குரோதமோ வெறுப்புக்களோ அல்ல. இந்த வாக்களிப்பின் போது எமது இளைஞர்கள் பொதுமக்கள் விடுத்த நியாயமான கோரிக்கைகளை ஏற்று தான் பாதீட்டிற்கு எதிராக எமது நியாயமான குறைபாடுகள் வேண்டுகோள்களை கூறி வாக்களித்தோம். அந்த வகையில் ஒவ்வொரு மாநகர சபையின் அமர்வின் போதும் தன்னிச்சையாக சட்டங்கள் கட்டளைச்சட்டங்களை கூறி முதல்வர் நடந்து கொள்கின்றார். இதனை கருத்தில் கொண்டும் முதல்வருக்கு எதிராக நாம் வாக்களித்திருந்தோம். இவ்வாறான விடயங்களை வைத்துக் கொண்டு எமது பகுதிகளில் இடம்பெறும் திண்மக்கழிவுகள் தொடர்பான பிரச்சினை மற்றும் மின்விளக்குகள் ஒளிராமை தொடர்பில் எழுப்பிய கேள்விகளுக்கு எவ்வித பதிலும் கிடைப்பதில்லை. சபையில் குறைகளை சுட்டிகாட்டி கதைக்கின்ற போது பிழையானவர்களாக எம்மை அடையாளப்படுத்துகின்றனர்.

எமது கல்முனை 12 வட்டாரமானது அதிக மக்களை கொண்ட ஒரு பிரதேசமாகும். இப்பகுதி மக்கள் என்னை அதிகமாக வாக்களித்து சபைக்கு உறுப்பினராக தெரிவு செய்து அனுப்பியுள்ளனர். இவ்வாறு இருந்த போதிலும் எனது சொந்த நிதியில் தற்போது மின்குமிழை கொள்வனவு செய்து அதனை பொருத்த முடியாமல் அலைக்கழிக்கப்பட்டுள்ளேன். முதல்வரை சந்தித்து கலந்துரையாடிய போது பல்வேறு காரணங்களை கூறி தட்டிக்களிக்கின்றார். எனவே கல்முனை வாழ் பொதுமக்கள் இளைஞர்களிடம் இவ்விடயத்தை தெரியப்படுத்த விரும்புகின்றேன் என்றார்.

## வாழைச்சேனை மீனவர்கள் மீது தாக்குதல்; மூவர் வைத்தியசாலையில்

( எஸ்.எம்.எம்.முர்ஷித்)

வாழைச்சேனையிலிருந்து உஷாமா தௌபீக் என்பவருக்குச் சொந்தமான ஆழ்கடல் படகில் மீன்பிடிக்கச் சென்ற மூன்று மீனவர்கள் மீது பெரும்பான்மை இனத்தைச்சேர்ந்த மீனவர்களால் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

தாக்குதலுக்கு உள்ளான மீனவர்கள் நேற்று மாலை கரைக்கு வந்ததுடன் சிகிச்சைக்காக வாழைச்சேனை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்கள்

தாக்குதல் சம்பவம் தொடர்பில் வாழைச்சேனை பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

# வீட்டில் தனிமையில் இருந்த ஆசிரியையை தாக்கிவிட்டு தங்க நகைகளை கொள்ளை

## திருக்கோவிலில் சம்பவம்

(கனகராசா சரவணன்)

அம்பாறை திருக்கோவில் பொலிஸ் பிரிவிலுள்ள தம்பிலுவில்; ஆதவன் வீதியில் வீடு ஒன்றில் தனிமையில் இருந்த ஆசிரியர் ஒருவரின் தலையில் தாக்கிவிட்டு அவரின் தங்க நகயை கொள்ளையடித்து சென்ற சம்பவம் திங்கட்கிழமை மாலையில் இடம்பெற்றுள்ளதாக திருக்கோவில் பொலிசார் தெரிவித்தனர்.

குறித்த ஆசிரியர் சம்பவதினமான திங்கட்கிழமை மாலையில் வீட்டில் தனிமையில் இருந்துள்ளர் இந்த நிலையில் மாலை 6 மணியளவில் வீடு திரும்பிய கணவர் மனைவி திலையில் காயம் எற்பட்டு இரத்த வெள்ளத்தில் மயங்கிய நிலையில் கீழே வீழ்ந்து கிடப்பதைக்கண்டு அவரை உடனடியாக திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இந்த நிலையில் குறித்த ஆசிரியரை தாக்கிவிட்டு அவரின் குழுத்தில் ஈரந்;த தங்க நகையை கொள்ளையடிக்கப்பட்டுள்ளதாக பொலிசாரின் ஆரம்ப கட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை திருக்கோவில் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.












# மன்னார் நகர சபையின் அக்கறையின்மையால் 420 மில்லியன் ரூபா அபிவிருத்தி திட்டம் கைநழுவும் அபாயம்

## மன்னார் மாவட்ட கூட்டத்தில் கவலை

(வாஸ் கூஞ்ஞ)



மக்களால் தெரிவு செய்யப்பட்ட மன்னார் நகர சபையானது மக்களின் நலனில் பொறுப்பற்ற தன்மையில் செயல்படுவதால் நகர அபிவிருத்தி சபையினால் 420 மில்லியன் ரூபா செலவில் முன்னெடுக்கப்பட இருக்கும் அபிவிருத்தி திட்டம் கைநழுவ இருப்பதாக மன்னார் மாவட்ட செயலக கூட்டத்தில் கவலை தெரிவிக்கப்பட்டது. இருந்தபோதும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டீமெல் தான் இவ்விடயத்தில் தொடர்ந்து முயற்சியை மேற்கொண்டு இவ் திட்டத்தை நடைமுறைபடுத்த இருப்தாகவும் இவ் கூட்டத்தில் தெரிவித்தார்.

மன்னார் தீவின் நுழை வாயிலான மன்னார் பாலத்துக்கு அருகாமையில் காலை மாலை நேரங்களில் பலர் நடை பயிற்சிகளை மேற்கொண்டு வருவதால் இவ்விடத்தில் அவர்களுக்கான வசதிகளை செய்து கொடுக்கும் நோக்குடன் நகர அபிவிருத்தி சபையானது 420 மில்லியன் ரூபா செலவில் எட்டு அடி அகலமும்; ஒன்றரை கிலோ மீற்றர் தூரம் கொண்ட பாதையும் அத்துடன் இளைப்பாறுவதற்கான பூங்காவும் அமைப்பதற்காக இரண்டு வருட திட்டமாக செயல்படுத்த நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டும் இவற்றை நடைமுறைப்படுத்த முடியாத நிலையில் இருப்பதாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபரின் கவனத்துக்கு கொண்டு செல்லப்பட்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட செயலகத்தில் மன்னார் மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் திங்கள் கிழமை (08.02.2021) வன்னி பாராளுமன்ற உறுப்பினரும் மன்னார் மற்றும் முல்லைத்தீவு ஒருங்கினைப்புக் குழுத் தலைவருமான கே.காதர் மஸ்தான் தலைமையிலும் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டீமெல், வன்னி பாராளுமன்ற உறுப்பினர் திலீபன் மற்றும் ஏனைய வன்னி பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரதிநிதிகளின் பங்களிப்போடும் அத்துடன் இதனுடன் தொடர்புடைய சகல திணைக்களங்கள் கிராமிய அபிவிருத்தி அமைப்புக்களின் பிரதிநிதிகள் மற்றும் மன்னார் பிரதேச சபை தவிசாளர், மன்னார் நகர சபை செயலாளர் ஆகியோர் கலந்து கொண்ட கூட்டத்தின்போது இது விடயமாக பிரஸ்தாபிக்கப்பட்டது.

இது சம்பந்தமாக மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி அ.ஸ்ரான்லி டீமெல் இவ் கூட்டத்தின்போது தெரிவிக்கையில் மன்னார் நகர அபிவிருத்தி சபையானது மேற்குறிப்பிடப்பட்டுள்ள நோக்கம் கொண்டு 420 மில்லியன் ரூபா நிதியில் இவ் அபிவிருத்தி திட்டத்தை முன்னெடுப்பதற்கு திட்டம் ஒன்றை மேற்கொண்டள்ளனர்.

இவ் திட்டத்தை முன்னெடுத்துச் செல்ல இருக்கும் இவ் இடம் சம்பந்தமாக உரிமை கோரி மன்னார் பிரதேச சபைக்கும் மன்னார் நகர சபைக்கும் இடையே மன்னார் மாவட்ட நீதவான் நீதிமன்றில் வழக்கு நிலுவையில் இருந்து வருகின்றது.

இவ் வழக்கு முடிவுறுவதற்கு காலம் கடந்து செல்லும் பட்சத்தில் இவ் திட்டம் எம் கையைவிட்டு செல்லும் அபாயம் தோன்றியுள்ளதால் இவ் திட்டத்தை அரசாங்க அதிபரின் பொறுப்பில் செய்வது எனவும் வழக்கில் யார் வெற்றி பெறுகின்றார்களோ அவர்களிடம் இது கையளிக்கப்படும் என இரு சபையினரிடம் தெரிவித்து அதற்கு இரு பகுதினரும் எழுத்து மூலம் தெரியப்படுத்த வேண்டும் தெரிவிக்கப்பட்டது.

இதற்கு மன்னார் பிரதேச சயையினர் இவ் வேண்டுகோளை ஏற்று உடன் அரசாங்க அதிபருக்கு எழுத்து மூலம் அனுமதி வழங்கியுள்ளனர். ஆனால் மன்னார் நகர சபையினர் இழுத்து அடிக்கும் தன்மையிலேயே தொடர்ந்து செயல்பட்டு வருவதாக இவ் கூட்டத்தில் தெரிவித்தார்.

அப்பொழுது இங்கு சமூகமளித்திருந்தவர்கள் பலர் மன்னார் நகர சபையின் பொறுப்பற்ற தன்மைக்கு கண்டனமும் தெரிவித்திருந்தபோதும் இருந்தும் அரசாங்க அதிபர் தொடர்ந்து இதற்கான முயற்சியாக விரைவில் இரு சபைகளையும் தனித் தனியே அழைத்து இவர்களுக்கு மீண்டும் விளக்கங்களை கொடுத்து இவ் திட்டத்தை கைநழுவ விடாது செயல்படுத்தும்படி இவ் கூட்டத்தில் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

# புற்றுக்குள் ஒளிந்திருந்த பாம்புகள் படையெடுக்கின்றன

## அஷாத் சாலி விசனம்

ஜனாஸா நல்லடக்கத்துக்கு அனுமதி வழங்கப்படும் என்ற பிரதமர் மஹிந்தவின் அறிவிப்பை அடுத்து, 20 க்கு ஆதரவளித்த எதிரணி முஸ்லிம் எம்.பிக்கள், இப்போது துள்ளிக் குதிக்கத் தொடங்கியுள்ளார்கள் என்று தேசிய ஐக்கிய முன்னணியின் தலைவரும் மேல் மாகாண முன்னாள் ஆளுநருமான அஷாத் சாலி தெரிவித்துள்ளார்.



பிரதமரின் ஒரேயொரு சொல்லை பிடித்துக்கொண்டு, அதற்கு கை, கால், முகம் வைத்து, உருவம் அமைத்து, அறிக்கை விட்டு, தம்பட்டம் அடிக்கின்றார்கள் என்று குற்றஞ்சாட்டியுள்ள அவர், 20 க்கு கை உயர்த்திய இந்த சமூகத் துரோகிகள் இவ்வளவு காலமும் 'மழை காலத்தில் புற்றுக்குள் ஒளித்த பாம்பு' போல் இருந்துவிட்டு, இன்று தொடக்கம் படமெடுத்து ஆடத் தொடங்குகிறார்கள் என்றும் தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது, தேர்தல் மேடைகளில் ராஜபக்ஷக்களை மோசமாக விமர்சித்து, மக்கள் மத்தியில் வாக்குகளை சூறையாடி வெற்றி பெற்றார்கள். பின்னர் சமூகத்தின் மீது எந்த அக்கறையும் இல்லாமல், அவர்களின் தலைமைகளுக்கும் கண்ணாமூச்சி விளையாட்டுக்காட்டிவிட்டு, கையை உயர்த்தினார்கள். தமது சொந்த நலன்களுக்காகவும் பட்ட கடன்களை அடைப்பதற்காகவுமே, இவர்கள் பெரமுன அரசுக்கு ஆதரவளித்து, கோட்டாவை சர்வ வல்லமை பொருந்தியவராக மாற்றினார்கள். இவர்கள் ஜனநாயகத்தை குழிதோண்டிப் புதைத்த கேவலம் கேட்டவர்கள்.

பாராளுமன்ற உறுப்பினர் ஹாபிஸ் நசீர் எம்.பியாவதற்கு முன்னரேயே, 'வென்ற பின்னர் அரசுக்கு ஆதரவளிப்போம்' என்று பகிரங்கமாக சொன்னவர். கட்சியின் கொள்கைக்கு மாறாக இவர் கருத்து தெரிவித்தவர். புத்தளத்தில் 'மரத்தில் ஒரு காலையும், மயிலில் மற்றொரு காலையும் வைத்துக்கொண்டு பொதுச்சின்னத்தின் மூலம் மந்திரிப் பதவிக்கு வந்த அலி சப்ரி எம்.பி, அடாத்தாகப் பிடித்து பறிபோகவிருந்த தனது கள்ளக் காணிகளை காப்பற்றுவதற்காக, தனது கட்சித் தலைமைக்கும் மாறுபாடு செய்து 20 க்கு ஆதரவளித்தார். ஏனைய எம்.பிக்கள் அனைவரும் பக்கா டீலர்கள்.

எனவே, சமூகத்துக்கு இவர்கள் எதையாவது செய்ய வேண்டுமென்று உளமார விரும்பினால், அறிக்கைகள் விடுவதை அவசரமாக நிறுத்த வேண்டும் இவ்வாறு அவர் தெரிவித்தார்.

# மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக துவிச்சக்கர வண்டிகள் கையளிப்பு

(வாஸ் கூஞ்ஞ)




மடு பிரதேச செயலகப் பிரிவில் மிகவும் வறுமைக் கோட்டின் கீழ் வாழும் மாணவர்களுக்கு புலன் பெயர்ந்து வாழும் ஒரு தம்பதினரால் மன்னார் அரசாங்க அதிபர் ஊடாக மடு பிரதேச செயலாளரிடம் துவிச்சக்கர வண்டிகள் கையளிக்கப்பட்டன.

இவ் நிகழ்வு கடந்த திங்கள் கிழமை (08.02.2021) மன்னார் மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

கனடாவில் வசிக்கும் திரு.திருமதி தேவபாலன் கஜந்தி ஆகியோரின் திருமண நினைவு நாளை முன்னிட்டு நற்பணியாக மிகவும் வறுமை கோட்டுக்கு கீழ் வசிக்கும் கிராமிய பாடசாலைகளில் கற்கும் மாணவர்களின் கல்வி மேம்பாட்டுக்காக நான்கு துவிச்சக்கர வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன.

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புத நர்த்தன விநாயகர் சனசமூக நிலையம் மற்றும் குமரன் விளையாட்டுக் கழகம் இணைந்து செயற்படுத்தும் 'உயர்த்தும் கரங்கள்' செயற் திட்டத்தின் ஊடாக இவ் துவிச்சக்கர வண்டிகள் மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஸ்ரான்லி டீமெல்லிடம் மன்னார் மாவட்ட செயலகத்தில் கையளிக்கப்பட்போது இவற்றை மடு பிரதேச செயலகப் பிரிவில் வறுமையில் வாழும் மாணவர்களுக்கு வழங்குவதற்காக மடு பிரதேச செயலாளர் திருமதி ஜெ.வினோஜிதாவிடம் கையளிக்கப்பட்டது. இவ் நிகழ்வில் மன்னார் மேலதிக அரசாங்க அதிபர் சி.குணபாலன் மற்றும் மன்னார் உதவி திட்டமிடல் பணிப்பாளர் சிவா ஆகியோரும் கலந்து கொண்டனர்.

# மூதூரில் பெரும்போக நெல்லினை உத்தரவாத விலைக்கு விற்பனை செய்ய நடவடிக்கை

(எப்.முபாரக்)

மூதூர் பிரதேசத்தில் இவ்வருட பெரும்போக நெற்செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகள் அறுவடை செய்யும் நெல்லினை நெல் சந்தைப்படுத்தும் சபைக்கு அரசின் உத்தரவாத விலைக்கு விற்பனை செய்ய உள்ளதாக மூதூர் பிரதேச விவசாயிகள் தெரிவிக்கின்றனர்.

மேலும் அரசினால் வழங்கப்படும் உர மானியங்களை பெற்றுக் கொள்வதாக இருந்தால் அறுவடையிலான நெல்லில் இருந்து இரண்டரை ஏக்கர்கள் தொடக்கம் 3 3/4 ஏக்கர் வரை செய்பவர்கள் ஆயிரம் கிலோ நெல்லினை நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்கவும் நாலு ஏக்கர் தொடக்கம் 5 ஏக்கர் வரை செய்கை பண்ணும் விவசாயிகள் 1500 கிலோ நெல்லின் வழங்க முடியும்.

மேலும் இது விடயமான பணிகளை விவசாய ஆராய்ச்சி உற்பத்தி உதவியாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள், மற்றும் கமக்காரர் அமைப்பின் பிரதிநிதிகள் நடைமுறைப்படுத்த உள்ளதாகவும் தெரிவிக்கின்றனர்.

# கல்லடி முகத்துவாரம் தோமஸ் அன்டணி குறுக்கு வீதிகளை புனரமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன



மக்களின் வரிப்பணத்தினை மக்களுக்கே கொண்டு செல்வோம் எனும் கருத்திட்டத்தின் கீழ் மட்டக்களப்பு மாநகர சபைக்குட்பட்ட தோமஸ் அண்டனி குறுக்கு வீதிகளை புனரமைக்கும் பணிகள் இடம்பெற்று வருகின்றன.

மாநகர சபைக்கு மக்களினால் செலுத்தப்பட்ட வரிப்பணத்தினை முழுமையாக மக்களுக்கே கொண்டு செல்ல வேண்டும் எனும் நோக்கில் மட்டக்களப்பு மாநகர சபையினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அபிவிருத்தி பணிகளின் ஓர் அம்சமாக 12ம் வட்டாரத்திற்குட்பட்ட கல்லடி புது முகத்துவாரம் தோமஸ் அண்டனி குறுக்கு வீதிகளை புனரமைக்கும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

குறித்த வீதிகளின் அபிவிருத்திப் பணிகளை நேற்று மாநகர முதல்வர் தியாகராஜா சரவணபவன், மாநகர சபையின் உறுப்பினர்களான சீ.ஜெயந்திரகுமார், த.இராஜேந்திரன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டனர்.

# கல்முனைப்பிராந்தியத்தில் இன்றும் மின் துண்டிப்பு அறிவிப்பு!

## காரைதீவு நிருபர் சகா

அம்பாறை கல்முனை மின் பொறியியலாளர் பிரிவில் அவசரத் திருத்த வேலை காரணமாக மின் துண்டிப்பு இடம்பெறவுள்ளதாக இலங்கை மின்சார சபையின் கல்முனை பிராந்திய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார்.

இன்று(11) வியாழக்கிழமை கல்முனை காரைதீவு போன்ற பகுதிகளில் காலை முதல் மாலை வரை மின் துண்டிப்பு இடம்பெறவிருக்கிறது.

அதன்படி கல்முனை நிந்தவூர் சாய்ந்தமருது ஆகிய மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட தரவைக் கோவில், கடற்கரைப்பள்ளி, அம்மன்கோவில்வீதி, உடையார் வீதி ,இஸ்லாமாபாத் வீட்டத்திட்டம், வீ.வீ. வீதி, ஒலுவில்,வெளவாலோடை ,நிந்தவூர் தியேட்டர் வீதி ,காரைதீவு ,சாய்ந்தமருது, மாளிகைக்காடு. கல்முனைக்குடி ஆகிய பகுதிகளில் இன்று வியாழக்கிழமை (11) மாலை 04 மணி முதல் மாலை 06 மணி வரையும் மின் தடைப்படும்.

நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட ஒலுவில், அன்சாரிபள்ளிவாசல் பகுதி, மீரா நகர், நிந்தவூர் மற்றும் அட்டப்பள பகுதி ஆகிய பகுதிகளில் சனிக்கிழமை (13) காலை 08.30 முதல் மாலை 05 மணி வரையும் மின் தடைப்படும்.

நிந்தவூர் மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட ஒலுவில், வெளவலோடை, நிந்தவூர், தியேட்டர் வீதி, சின்னப்பாலமுனை, உதுமாபுரம், திராய்க்கேனி, அட்டாளைச்சேனை, மீலாத்நகர் ஆகிய பகுதிகளில் 1% ஆம் திகதி காலை 08.30 மணி முதல் மாலை 05 மணி வரையும் மின் தடைப்படும்.

சம்மாந்துறை மின் பாவனையாளர் சேவை நிலையத்துக்குட்பட்ட அம்பாறை வீதி. ஹிலால்புரம், வங்களாவடி, உடங்கா ஆகிய பகுதிகளில் 18 ஆம் திகதி காலை 08.30 முதல் மாலை 05 மணி வரையும் மின் தடைப்படுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

# குச்சவெளி சமளன்குள விசாயிகளின் நலன் கருதி பாலம் அமைக்க ஏற்பாடு

(எப்.முபாரக்)

குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட குச்சவெளி சமளன் குள பகுதியில் ஊடருத்து செல்லும் ஆற்றிக்கு குறுக்காக விவசாயிகளின் நலன் கருதி பாலம் அமைப்பதற்கான ஏற்பாடுகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி விவசாய சங்கத் தலைவர் தெரிவித்தார்.

சமலன் பகுதியிலுள்ள விவசாயிகள் திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம்.எஸ்.தௌபீக்கிடம் விடுத்த கோளுக்கிணங்க பாலம் அமைப்பதற்கான அளவீட்டு நடவடிக்கைகள் திருகோணமலையிலுள்ள நீர்ப்பாசன பொறியியலாளர் குழுவினர் செவ்வாய் கிழமை (9) நேரடியாக விஜயம் மேற்கொண்டு பாலம் அமைக்கப்படவுள்ள இடத்தினை பார்வையிட்டு வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் அப்பகுதி விவசாய சங்கத் தலைவர் தெரிவித்தார்.

பொறியியலாளர் குழுவுடன் குச்சவெளி பிரதேச சபை உறுப்பினர்களான ஏ.எம்.மீஸான், எம்.யாசீர் அரபாத் மற்றும் சமளன் குள விவசாயிகள் பலரும் கலந்து கொண்டார்கள்.





## மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்களுக்கான செயலமர்வு





(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

அதிமேதகு ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவின் 10 அம்ச கொள்கைகள் அடங்கிய தேசிய கொள்கைகள் சட்ட திட்டத்திற்கு அமைவாக சுபீட்சமான நாட்டை கட்டியெழுப்பும் செயற்பாட்டின் கீழ் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்களுக்கான விளையாட்டினூடாக துடிப்பான தேசத்தை உருவாக்குவது தொடர்பான செயலமர்வு திங்கட்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமான கணபதிப்பிள்ளை கருணாகரன் தலைமையில் மாவட்ட செயலகத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந் நிகழ்வில் அரச அதிபர் உரையாற்றுகையில் சகல அரச உத்தியோகத்தர்களும் ஜனாதிபதியின் சுபீட்சத்தை நோக்கிய தேசிய கொள்கைகள் சட்ட திட்டத்தை நன்கு விளங்கிக்கொள்வதுடன் எதிர்வரும் காலங்களில் இத் தேசிய கொள்கைகளுக்கமைய தங்களுடைய கடமைகளில் ஈடுபடவேண்டும் எனவும் கருத்து தெரிவித்தார். மேலும் கருத்து தெரிவிக்கையில் சகல விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்களும் பொறுப்புடன் செயற்பட்டு மட்டக்களப்பு மாவட்டத்தினுடைய விளையாட்டுத்துறையை மேம்படுத்த வேண்டும் எனவும் உரையாற்றினார்.

இந் நிகழ்வில் காணிப்பிரிவிற்கான மேலதிக அரசாங்க அதிபர் திருமதி. நவரூபரஞ்சனி முகுந்தன், மாவட்ட சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு உத்தியோகத்தர் திரு. வீ. குகதாசன், மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு உத்தியோகத்தர் வீ. ஈஸ்வரன், மட்டக்களப்பு மாவட்ட விளையாட்டு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம். ஐ. ஆதம்லெப்பை மற்றும் விளையாட்டுத்துறை உத்தியோகத்தர்கள் பலரும் கலந்துகொண்டனர்.

## மட்டக்களப்பில் ஆடை கைத்தொழில் பூங்கா அமைப்பதற்காக 200 ஏக்கர் காணி இலங்கை முதலீட்டாளர் சபைக்கு கையளிப்பு

(கனகராசா சரவணன்)





மட்டக்களப்பில் ஆடைக் கைத்தொழில் பூங்கா அமைப்பதற்காக செங்கலடி புண்ணக்குடா பகுதியில் 200 ஏக்கர் காணி இலங்கை முதலீட்டாளர் சபைக்கு பின்தங்கிய கிராம அபிவிருத்தி மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேமம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் இலங்கை முதலீட்டாளர் சபை பிரதிப் பணிப்பாளர் எஸ். சட்குணலிங்கத்திடம் செவ்வாய்க்கிழமை (10) காணிக்கான ஆவணத்தை கையளித்தா.

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய கே. கருணாகரன் தலைமையில் இந்த காணிகையளிக்கும் நிகழ்வு இடம் பெற்றது இதில் காணிப்பிரிவிற்கான மேலதி அரசாங்க அதிபர் திருமதி. நவரூபரஞ்ஜினி முகுந்தன், காணி சீர்திருத்த ஆணைக்குழு மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களுக்கான பணிப்பாளர் என். விமல்ராஜ், காணி சீர்திருத்த ஆணைக்குழு கிளை நிருவாகப் பொறுப்பாளர் எஸ். சுரேந்தர் உட்பட கிளை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர்.

இதில் இலங்கை முதலீட்டாளர் சபையின் வேண்டுகோளின் போரில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் இனங்காணப்பட்ட 200 ஏக்கர் காணிகளும் அளவை செய்யப்பட்டு ஆடைக் கைத்தொழில் பூங்கா அமைப்பதற்காக முதலீட்டார் சபைக்கு கையளிக்கப்பட்டது.

இதனூடாக வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நான்கு ஆடைக் கைத்தொழில் நிறுவனங்கள் இங்கு அமைக்கப்படவிருப்பதுடன் இம்மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 8 ஆயிரம் இளைஞர் யுவதிகள் நேரடியாக வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளவிருக்கின்றனர். மற்றும் இது போன்று மும்மடங்கு மறைமுகமான தொழில் வாய்ப்புக்கள் இம்மாவட்ட மக்களுக்கு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது என இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

மட்டக்களப்பில் ஆடைக் கைத்தொழில் பூங்கா அமைப்பதற்காக செங்கலடி புண்ணக்குடா பகுதியில் 200 ஏக்கர் காணி இலங்கை முதலீட்டாளர் சபைக்கு பின்தங்கிய கிராம அபிவிருத்தி மனைசார் கால்நடை வளர்ப்பு மற்றும் சிறு பொருளாதார பயிர்ச்செய்கை மேமம்பாட்டு இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் இலங்கை முதலீட்டாளர் சபை பிரதிப் பணிப்பாளர் எஸ். சட்குணலிங்கத்திடம் நேற்று செவ்வாய்க்கிழமை (10) காணிக்கான ஆவணத்தை கையளித்தாட.;

மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் மாவட்ட செயலாளரும் அரசாங்க அதிபருமாகிய கே. கருணாகரன் தலைமையில் இந்த காணிகையளிக்கும் நிகழ்வு இடம் பெற்றது இதில் காணிப்பிரிவிற்கான மேலதி அரசாங்க அதிபர் திருமதி. நவரூபரஞ்ஜினி முகுந்தன், காணி சீர்திருத்த ஆணைக்குழு மட்டக்களப்பு திருகோணமலை மாவட்டங்களுக்கான பணிப்பாளர் என். விமல்ராஜ், காணி சீர்திருத்த ஆணைக்குழு கிளை நிருவாகப் பொறுப்பாளர் எஸ். சுரேந்தர் உட்பட கிளை உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். இதில் இலங்கை முதலீட்டாளர் சபையின் வேண்டுகோளின் போரில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவினால் இனங்காணப்பட்ட 200 ஏக்கர் காணிகளும் அளவை செய்யப்பட்டு ஆடைக் கைத்தொழில் பூங்கா அமைப்பதற்காக முதலீட்டார் சபைக்கு கையளிக்கப்பட்டது.

இதனூடாக வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நான்கு ஆடைக் கைத்தொழில் நிறுவனங்கள் இங்கு அமைக்கப்படவிருப்பதுடன் இம்மாவட்டத்தைச் சேர்ந்த சுமார் 8 ஆயிரம் இளைஞர் யுவதிகள் நேரடியாக வேலை வாய்ப்பினைப் பெற்றுக்கொள்ளவிருக்கின்றனர். மற்றும் இது போன்று மும்மடங்கு மறைமுகமான தொழில் வாய்ப்புக்கள் இம்மாவட்ட மக்களுக்கு கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது என இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

## தமிழர்களின் பூர்வீக இடங்களை நிராகரிக்கின்ற தொல்பொருள் செயலணியில் புதிதாக நியமிக்கப்பட்டதை ஜனாதிபதி மீள்பரிசீலனை செய்யவேண்டும்

### மு.கிழக்கு மாகாண சபை உறுப்பினர் இரா.துரைரெத்தினம் வேண்டுகோள்

(கனகராசா சரவணன் )



பௌத்த மத குருக்களால் தமிழர்களின் பாரம்பரியத்தை நிராகரிக்கின்ற சூழலில் தொல்பொருள் செயலணிக்கென மீண்டும் மீண்டும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களையே நியமனம் செய்துள்ளதை மீள்பரிசீலனை செய்யுமாறு முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர், ஈ.பி.ஆர்.எல்.எப், பத்மநாபா மன்றம், இரா.துரைரெத்தினம் ஜனாதிபபதியிடம் பகீரங்க வேண்டுகோள் விடுத்துள்ளார்.

முன்னாள் கிழக்கு மாகாணசபை உறுப்பினர், ஈ.பி.ஆர்.எல்.எப், பத்மநாபா மன்றம், இரா.துரைரெத்தினம். புதன்கிழமை (11) ஊடக அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்திற்காக உருவாக்கப்பட்ட தொல்பொருள் செயலணியானது 2020யூன்மாதம் 1ம் திகதி அன்று உருவாக்கப்பட்டது. இதில் தெரிவு செய்யப்பட்ட அனைவரும் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்கள்.

இச்செயலணி கிழக்குமாகாணத்திற்கென தெரிவு செய்யப்பட்டுள்ளதால் கிழக்குமாண விகிதாசாரத்திற்கு ஏற்றவாறு பெரும்பான்மையான தமிழர்கள் தெரிவு செய்யப்பட வேண்டுமென மக்கள் பிரதிநிதிகளும், இவ்விடயத்தில் அக்கறை உடையவர்களும், அரசின் ஆளும்தரப்பைச் சேர்ந்த அமைச்சர் டக்லஸ்தேவானந்தா. அமைச்சர் ச.வியாழேந்திரன் ஆகியோர் தமிழர்களை தெரிவு செய்யுமாறு கோரிக்கை விடுத்திருந்ததனர்.

இப்படிப்பட்ட சூழ்நிலையில் ஓய்வூதியம், இடமாற்றம் பெற்று சென்றவர்களுக்குப் பதிலாகவும் மேலும் புதிதாக ஐந்து பேர் பெரும்பான்மை இனத்தைச் சார்ந்த சிங்களவர்கள் மட்டும் தெரிவுசெய்யப்பட்டு வர்த்தமானி பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது.

இத் தொல்பொருள் செயலணியில் புத்தசாசன அமைச்சின் செயலாளர் பேராசிரியர் கபில குணவர்த்தன, தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் மூத்த பேராசிரியர் அனுர மானதுங்க, காணி ஆணையாளர் நாயகம் கீர்த்தி கமகே, சிவில்பாதுகாப்பு திணைக்களப் பணிப்பாளர் மேஜர்ஜெனரல் ஆர்.டி.நந்தனாசேனதீர, கிழக்கு மாகாண காணி ஆணையாளர் அசின்சல சேனவிரத்ன ஆகியோர் புதிதாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந் நியமனங்களைப் பொறுத்தவரையில் இனவாத அரசின் ஜனாதிபதி தொடக்கம் சாதாரண மக்கள் பிரதிநிதிகள் வரையும், பௌத்தமத குருமார்கள், அரச படையினர் போன்றோர்கள் இந் நாட்டை பௌத்த நாடாக மாற்றுவதற்கும் பௌத்த கொள்கைகளை அமுலாக்குவதற்கும் அரச படைகள் தொல்பொருள் உள்ள இடங்களை பார்வையிட்டு பௌத்தத்திற்கான புனித இடங்கள் எனக்கூறும் போது தமிழர்களாகிய நாங்கள் தமிழர்களுக்குரிய புராதான அடையாளங்களை விட்டுக் கொடுப்பதற்கு எச் சந்தர்ப்பத்திலும் துணை போக முடியாது.

தொல்பொருள் செயலணியில் தமிழர்களையும் நியமிக்க வேண்டுமென ஆளும் தரப்பிற்கு ஆதரவு தெரிவிக்கும் அமைச்சர்கள் கூறியதைக் கூட ஏற்றுக் கொள்ளாதவர்கள் எவ்வாறு தமிழர்களின் தொல்பொருள் இடங்களை பாதுகாப்பார்கள்.

எனவே தமிழர்களாகிய நாங்கள் பல தசாப்தங்களாக எமது அடையாளச் சின்னங்களை, எமது அடையாளங்களை, தொல்பொருள் கலாசார பண்பாட்டை பாதுகாக்க முடியுமோ பாதுகாத்து வருகின்றோம். இதை எதிர்காலத்திலும் பாதுகாப்பதற்கு திடசங்கற்பம் பூணுமாறு அறைகூவல் விடுக்கின்றேன்.

இத்தோடு மாவட்டத்திலுள்ள அரச சார்புள்ள அமைச்சர்களை தொல்பொருள் தொடர்பாக உங்களை நீங்கள் பரிசீலனை செய்யுமாறும், தமிழர்களின் நலன் தொடர்பாக பொதுவான விடயங்களில் சில இணக்கப்பாட்டுடன் செல்வதற்கு அணிதிரளுமாறு கேட்டுக்கொள்கின்றேன் ஏன அந்த அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

## பாண்டிருப்பு கடற்கரைவீதி கும்மிருட்டில்.. மக்கள் அவதி! மாநகரசபை உறுப்பினர்கள் மூவரின் கவனத்திற்கு..



( வி.ரி.சகாதேவராஜா)

கல்முனை மாகரசபைக்குட்பட்ட பாண்டிருப்பு கடற்கரை வீதி மற்றும் சவக்காலை வீதிகளில் பொருத்தப்பட்டுள்ள மின்குமிழ்கள் மாதக்கணக்காக ஒளிராமலுள்ளன.

பாண்டிருப்பு கடற்கரை வீதியில் இரு ஆலயங்கள் சிறுவர் பூங்கா என்பன அமைந்துள்ளன. இவ்வீதியை மக்கள் போக்குவரத்திற்காக அதிகம் பயன்படுத்துகின்றனர்.மேலும் பாண்டிருப்பு கடற்கரையை இரவு வரை பயன்படுத்துவோர் அதிகம். ஆரோக்யாவிற்கு வருவோரின் தொகையும் அதிகம்.

இந்நிலையில் அப்பகுதியில் வெளிச்சம் இல்லாதது மக்கள் மத்தியில் பெரும் அசௌகரியத்தையும் வெறுப்பையும் ஏற்படுத்தியுள்ளது.

எனவே இவறறுக்கு வகைகூற வேண்டிய பாண்டிருப்பில் உள்ள மூன்று மாநகரசபை உறுப்பினர்களும் மின்குமிழ்களை ஒளிரச்செய்ய விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இவர்களில் மாகரசபை உறபுபபினர் திருமதி புவனேஸ்வரி வினாயகமூர்த்தி என்பவரே பல மின்விளக்குகளை ஏலவே பொருத்தியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு மாவட்டத்தில் பெரும்போக நெற்செய்கையில் 60 வீதமான அறுவடை நிறைவு பெற்றுள்ளது

(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)







மட்டக்களப்பு மாவட்டத்தில் 2020-21 இற்கான பெரும்போக நெற்செய்கையில் இதுவரை 60 வீதமான அறுவடை நிறைவு பெற்றிருப்பதாக விவசாய விரிவாக்கல் திணைக்கள பிரதிப் பணிப்பாளர் வீ. பேரின்பராசா தகவல் திணைக்கள மாவட்ட ஊடகப் பிரிவிற்கு தெரிவித்தார். மேலும் இப்பெரும்போக நெற்செய்கை அறுவடை இம்மாத இறுதிக்குள் நிறைவடையும் என அவர் மேலும் தெரிவித்தார்.

இப்பெரும்போகத்தில் இம்மாவட்டத்தில் %6 ஆயிரத்தி 346 ஹெக்டேயர் நிலப்பரப்பில் நெற் செய்கை பண்ணப்படும் என எதிர்பார்க்கப்பட்டிருந்தது. அவற்றில் 100 வீதமான நிலங்களில் நெற்பயிர் செய்கை பண்ணப்பட்டுள்ளதுடன் அவற்றுக்காக அரசினால் வழங்கப்படும் மானிய உரங்களும் பெற்றுக் கொடுக்கப்பட்டிருந்தன.

மேலும் இம்முறை ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் 11 ஆயிரத்தி 938 விவசாயிகளினது வயல்நிலங்களான 10 ஆயிரத்தி 412.5 ஹெக்டேயர் நெற்செய்கை அழிவுற்றுள்ளது. இதுதவிர மீதமுள்ள 65 ஆயிரத்தி 933.5 ஹெக்டேயர் விவசாய நிலத்தில் கிடைக்கப்பெற்ற நெல் விளைச்சல்களில் 60 வீதமானவை அறவடை செய்யப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ளவை இம்மாத இறுதிக்குள் அறுவடை செய்யப்படவுள்ளதாகவும் அவர் மெலும் தெரிவித்தார்.

இம்முறை கிடைக்கப்பெற்ற சராசரி விளைச்சலானது ஏக்கர் ஒன்றிற்கு 25 தொடக்கம் 30 மூடைகள் என தெரிவிக்கப்படுகிறது.

இதுதவிர அரச சுற்றுநிருபத்திற்கமைவாக இவ்வருடம் 2020-21 பெரும்போக நெற் செய்கையின்போது எவரேனும் ஒரு விவசாயி ஒரு ஹெக்டேயர் (2.5 ஏக்கர்) அல்லது அதற்கு அதிகமான காணிகளில் நெற்செய்கை மேற்கொள்ளும்போது நெல் உரநிவாரண நிகழ்ச்சித் திட்டத்தின்கீழ் நிவாரண உரங்களை 300 கிலோ அல்லது அதற்கு அதிகமான அளவுகளில் பெற்றுக் கொள்கின்ற விவசாயிகள் தாம் அறுவடைசெய்யும் நெல்லில் ஆகக்குறைந்தது 1000 கிலோ அல்லது அதற்கு அதிகமான அளவை அல்லது விவசாயிகளின் விருப்பப்படி அதற்கதிகமான அளவு நெல்லை அரசநெல் சந்தைப்படுத்தும் சபைக்கு கட்டாயமாக வழங்கவேண்டும் என்பது குறிப்பிடத்தக்கது.

சுபீட்சம் கிழக்குச் சூரியன் 11 FEBRUARY 2021, THURSDAY

# ஜனாஸா விடயத்தில் பிரதமரின் கருத்து நம்பிக்கையளிக்கிறது

## : ஹரீஸ் எம்.பி நன்றி தெரிவித்தார்!

**(நூருள் ஹுதா உமர்)**

ஜனாஸா நல்லடக்க விடயத்தில் முஸ்லிம்களின் எண்ணங்களுக்கு மதிப்பளித்து சிறந்த தீர்மானமாக நல்லடக்கம் செய்ய இடம் கொடுக்கப்படும் என இன்று நடைபெற்ற பாராளுமன்ற அமர்வில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஸ தெரிவித்தார்.

அப்போது சபை அமர்வில் கலந்து கொண்ட ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித்தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான எச்.எம்.எம். ஹரீஸ், பிரதமரை விழித்து கொரோனா தொற்றினால் இறந்ததாக நம்பப்படும் உடல்களை அடக்கம் செய்ய இடம் தரப்படும் என்று கூறி உள்ளீர்கள். இந்த முடிவுக்கு இலங்கை மக்கள் சார்பிலும், குறிப்பாக முஸ்லிம்களின் சார்பிலும் பிரதமர் மஹிந்த ராஜபக்சவுக்கு நன்றிகளை தெரிவிக்கிறேன் என்றார்.

இது குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போது, இன்றைய பாராளுமன்ற அமர்வுக்கு முன்னர் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்கள் குழு பிரதமரை அவரது அறையில் சந்தித்து ஜனாஸா நல்லடக்கம் தொடர்பில் விரிவாக எடுத்துரைத்ததுடன் இந்த விடயம் தொடர்பில் தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டும் என்று கேட்டு கொண்டதாகவும் பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம். ஹரீஸ் தெரிவித்தார்.



பிரதமரின் நிலைப்பாடு நம்பிக்கை யளிப்பதுடன், ஜனாஸா நல்லடக்கம் செய்ய சிறந்த காலம் கனிந்துள்ளதாக முஸ்லிம்களின் மத்தியில் நம்பிக்கை பிறந்துள்ளது எனவும் பிரதமரின் இந்த சந்திப்பில் என்னுடன் பாராளுமன்ற உறுப்பினர்களான பைசால் காசிம், எம்.எஸ்.தவுபிக், முஸாஃரப் முதுநபின், மர்ஜான் பழீல், காதர் மஸ்தான், இசாக் ரஹ்மான் ஆகியோர் கலந்து கொண்டனர் என மேலும் அவர் தெரிவித்தார்.

# திருக்கோவில் சமுர்த்தி வங்கி கணனி மயமாகியது!



(திருக்கோவில் நிருபர் எஸ்.கார்த்திகேசு)

**(வி.ரி.சகாதேவராஜா)**

திருக்கோவில் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட தம்பிலுவில் சமுர்த்திவங்கி மற்றும் சமுர்த்தி மகாசங்கம் ஆகியவை நேற்று கணணி மயமாக்கப்பட்டது .

திருக்கோவில் பிரதேச செயலாளர் த.கஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாயகம் ஜெகதீசன் பிரதம அதியாக கலந்துகொண்டு இந் நிகழ்வை ஆரம்பித்து வைத்தார்.

மேலும் நிகழ்வில் மற்றும் உதவிப்பிரதேச செயலாளர் கந்தவனம் சதிசேகரன் திருக்கோவில் பிரதேச செயலக உதவித்திட்டமிடல் பணிப்பாளர் செல்வி எம்.அனோஜா திருக்கோவில் பிரதேச சமூர்த்தி முகாமையாளர் கே.பரமானந்தம் மற்றும் திருக்கோவில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இதனால் மக்களின் கொடுக்கல் வாங்கல்கள் இலகு வாக்கப்படும் நேரம் மீதமாகும் என்று கூறபபட்டது.

# தேசிய கல்வியற் கல்லூரிக்கான நேர்முகப்பரீட்சை

**(எம்.ஜே.எம்.சஜீத்)**



தேசிய கல்வியற் கல்லூரிக்கு புதிதாக அனுமதிக்கப்படவுள்ள ஆசிரிய பயிலுனர்களுக்கான நேர்முகப் பரீட்சை எதிர்வரும் 14 ஆம் 15 ஆம் திகதிகளில் அட்டாளைச்சேனை மத்திய மகா வித்தியாலயத்தில் (தேசிய பாடசாலை) நடைபெறும் என அட்டாளைச்சேனை தேசிய கல்வியற் கல்லூரியின் பீடாதிபதி திரு. கே. புண்ணியமூர்த்தி தெரிவித்தார்.

இதற்கமைய இஸ்லாம், கணிதம், வணிக கல்வியும் மற்றும் கணக்கீடு ஆகிய பாடநெறிகளுக்கு 100 பயிலுனர்களுக்கான நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ளது. இவர்களுக்கான கடிதங்கள் தனித்தனியாக விண்ணப்படிவத்தில் குறிப்பிடப்பட்ட முகவரிக்கு தபாலில் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

நேர்முக பரீட்சைக்கு கடிதம் அனுப்பப்பட்டவர்கள் அதில் குறிப்பிடப்பட்டுள்ள சகல ஆவணங்களுடனும் காலை 9 மணிக்கு சமூகமளிக்க வேண்டும்.

2018 ஆம் ஆண்டு க.பொ.த உயர்தர பரீட்சை பெறுபேறுகளுக்குமைய கல்வியற் கல்லூரிகளுக்கு ஆசிரிய பயிலுனர்கள் இணைத்துக்கொள்ளப்படவுள்ளனர் என்று பீடாதிபதி திரு. கே. புண்ணியமூர்த்தி தெரிவித்தார்.

# பொத்துவில் பிரதேசத்தில் வறிய குடும்பங்களுக்கு புதிய வீடுகள் கையளிப்பு



**(எஸ்.கார்த்திகேசு)**

அம்பாறை பொத்துவில் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட வீடற்ற வறிய குடும்பங்களுக்கு அரசாங்கத்தின் சௌபாக்கியா திட்டத்தின் ஊடாக புதிய வீடுகள் கையளிக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு பொத்துவில் பிரதேச செயலாளர் சந்துருவன் அனுருத்த தலைமையில் செவ்வாய்கிழமை(09) இடம்பெற்று இருந்தன.

இவ் வீடுகள் சமூர்த்தி சௌபாக்கியா திட்டத்தின் ஊடாக பொத்துவில் பிரதேசத்தில் வீடற்ற நிலையில் வாழ்ந்து வருகின்ற குடும்பங்களில் முன்னுரிமை அடிப்படையில் பிரதேசத்தில் ஏழு வீடுகள் புதிதாக அமைக்கப்பட்டு வருவதுடன் இன்று நான்கு வீடுகள் பயனாளிகளிடம் வைபவ ரீதியாக கையளிக்கப்பட்டுள்ளன.

அந்தவகையில் பொத்துவில் பிரதேசத்தில் பொத்துவில் 05 பொத்துவில் 16 பொத்துவில் 20 மற்றும் பொத்துவில் 21 ஆகிய கிராம சேவையாளர் பிரிவுகளில் உள்ள வீடற்ற குடும்பங்களுக்கு இவ்வாறு புதிய வீடுகள் கையளிக்கப்பட்டு இருந்தன.

இவ் வீடுகள் தலா இரண்டு இலட்சம் பெறுமதியில் அமைக்கப்பட்டுள்ளதுடன் இவ் வீடுகளை கையளிக்கும் நிகழ்வில் அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வேதநாகம் ஜெகதீசன் பொத்துவில் பிரதேச செயலாளர் சந்துருபன் அனுரூத்த உதவிப் பிரதேச செயலாளர் வை.றாசீத் சமூர்த்தி தலைமை முகாமையாளர் ஏ.அரசரெத்தினம் மாவட்ட சமூர்த்தி தலைமைக் காரியாலய அதிகாரிகள் பொத்துவில் சமூர்த்தி வங்கி முகாமையாளர்கள் உத்தியோகத்தர்கள் கிராம சேவையாளர்கள் பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் என பலரும் கலந்து கொண்டு இருந்தனர்.

உண்மைச் செய்திகளை உடனுக்குடன் அறிந்து கொள்ள
WWW.SUPEEDSAM.COM

# சன் பிரைட் பிரீமியர் லீக் கிரிக்கட் சுற்றுப்போட்டி!

## : சம்பியனானது வாரியர்ஸ் அணி!



**(எம்.என்.எம்.அப்ராஸ்)**

கல்முனை - சன் பிரைட் கழகத்தின் பிரீமியர் லீக் கிரிக்கட் சுற்றுப் போட்டியில் வாரியர்ஸ் அணி வெற்றி பெற்று கிண்ணத்தை தனதாக்கிகொண்டது.

குறித்த சுற்று போட்டியில் இலவன் ஸ்பார்டன்ஸ் (11 SAPARTANS), வாரியர்ஸ் (WARRIORS), ஹார்ட் ஹைட்ரஸ் (HARD HITTERS) ஆகியமூன்று அணிகள் மோதின.

இவ் போட்டிகள் யாவும் கல்முனை சாந்தான்கேணி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (05) நடைபெற்றது.

அணிக்கு 7 ஓவர்கள் கொண்ட மென்பந்து சுற்று போட்டியில் ஒரு அணிக்கு இரண்டு போட்டிகள் கொண்ட சுற்றுத்தொடரில் வாரியஸ் மற்றும் ஹார்ட் ஹைட்ரஸ் அணிகள் இறுதி போட்டிக்கு தெரிவு செய்யபட்டது.

இறுதி போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய ஹார்ட் ஹைட்ரஸ் அணி 7 ஓவர் முடிவில் 5 விக்கட்டுக்களை இழந்து 50 ஓட்டங்களை பெற்றது.

பதிலுக்கு துடுப்பாடிய ஆடிய வாரியஸ் அணி 7 ஓவர் முடிவில் 4 விக்கட்டுக்களை இழந்து 53 ஓட்டங்களை பெற்று போட்டியில் சம்பியனாக வெற்றி வாகை சூடியது.

போட்டியில் ஆட்டநாயகனாக வாரியஸ் அணி வீரர் எம்.அஷ்பாக் தெரிவானார்.